**செய்தி வெளியீடு எண்: 428** **நாள்: 30.08.2016**

## சிறு தொழில் முனைவோர்களுக்கான ஆலோசனை மையம்

தமிழக அரசின் நிறுவனமான தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் (www.editin.in) கிண்டி சிட்கோ தொழிற்பேட்டையில் இயங்கி வருகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் 2013–14 ஆம் ஆண்டில் முதல் தலைமுறை தொழில் முனைவோரை ஊக்குவிப்பதற்காக புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில்கள் மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) தொடங்கினார். மேலும் வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP) மற்றும் பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்(PMEGP) ஆகிய திட்டங்கள் நடைமுறைபடுத்தப்படுகிறது.

புதியதாக தொழில் தொடங்கும் தொழில் முனைவோருக்கு வழிகாட்டுதல். ஆலோசனை மற்றும் ஆதரவு கொடுக்க வேண்டியுள்ளது. தற்போது குறு மற்றும் சிறு தொழில் செய்யும் தொழில் முனைவோர்கள் நிதி மேலாண்மை வரிகள், வாடிக்கையாளர்களை கையாளுதல், வருவாயை பெருக்குதல் மற்றும் செலவினங்களை கட்டுபடுத்துதல் போன்றவற்றில் சந்திக்கும் சவால்களை எதிர்கொள்ள ஆலாசனைகள் வழங்குவது அவசியமாகும்.

இவ்வாறு தொழில் செய்து வரும் தொழில் முனைவோர்களுக்கு, அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை எப்படி சமாளிப்பது என்பதை விளக்க (Entrepreneur’s Clinic)மையத்தை அமைத்து, தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனமும், பாரதிய யுவ சக்தி அறக்கட்டளையும் (a unit of Confederation of Indian Industry) இணைந்து ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை மாலை 3.00 மணி முதல் 5.30 மணி வரை கூட்டம் நடத்தவுள்ளது. நிதி, வங்கி மறும் மேலாண்மை துறையில் 3 வல்லுனர்கள் தொழில் முனைவோர்கள் பிரச்சனைகளுக்கு ஆலோசனைகள் வழங்குவார்கள். இக்கூட்டம் ஜுன், ஜுலை மற்றும் ஆகஸ்டு மாதங்களில் ஒவ்வொரு வியாழக்கிழமையும் மாலை 3.00 மணி முதல் 5.30 மணி வரை நடைபெற்றது.

செப்டம்பர் மாதத்திற்கான ஆலாசனை மையம் 1.9.2016, 8.9.2016, 15.9.2016, 22.9.2016 மற்றும் 29.9.2016 ஆகிய தினங்களில் சென்னை 600 032, ஈக்காட்டுத்தாங்கல், பார்த்த சாரதி கோயில் தெருவில் அமைந்துள்ள தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவன வளாகத்தில் மாலை 3.00 மணியளவில் நடைபெறவுள்ளது. மேலும் தகவலுக்கு துணை இயக்குநர் அவர்களை 8754590961 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**